திருவள்ளுவர் ஆண்டு 2040

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 103 பகுதி : 2 | பிப்ரவரி - 09 | விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

உலகத் தாய்மொழி வாழ்த்து!

புகழ்மிகு முதன்மொழி தமிழெனவே
போற்றுதுமே வணங்கிப் போற்றுதுமே!
திகழ்லெ மூரியாக் கண்டமாம்
தெற்கே குமரி நாடதனில்
முதன்மை மாந்தனின் முதன்மொழி
முன்னைத் தமிழெனவே போற்றுதுமே!
உலக மொழிக் கெல்லாம் தாயென
ஓர்ந்து ணர்ந்து போற்றுதுமே!
துரேனிய ஆரியச் சேமியத்
தொகுப்பில் அடங்கும் உலகமொழியெனில்
முக்குல மொழிகளுக்கு மூலமொழி
திக்குபுகழ் தமிழெனவே போற்றுதுமே!
எம்மொழித் துணையுமின்றி இயங்கும்
செம்மொழித் தனித்தமிழைப் போற்றுதுமே!
உலக மொழிகள் அனைத்திலும்
உள்ளார்ந்த தமிழெனவே போற்றுதுமே!
வையத்தார் வாழ வாய்த்ததாய்த்
தமிழைத் தலைவணங்கிப் போற்றுதுமே!

(உலகத் தாய்மொழி நாள் பெப்ரவரி - 22 என்பது குறிப்பிடத்தக்கது)

– முனைவர் *அரசக்கண்ணன்*
தஞ்சாவூர்

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 103
பகுதி : 2
பிப்ரவரி 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2040**

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

இதழ்மணம் 3

செந்தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும் 4
பெரும்புலவர் இரா.இளங்குமரன்

சித்தர் பாடல்களில் வெண் உடல் சித்தரிப்பு 9
சென்ற இதழ்த் தொடர்ச்சி
முனைவர் தே.ஞானசேகரன்

பண்டை இலக்கியங்களும் மனிதநேயமும் 20
முனைவர் செ.தனலக்குமி

எண்கள் புலவர் க.தண்டபாணி 27

சங்க இலக்கியங்களில் சொற்கள் காட்டும் தொன்மை 30
பேராசிரியர் அருள்நிதி இராம இருசுப்பிள்ளை

ஒரு குறள் படும்பாடு பெரும்புலவர் ப.அரங்கசாமி 35

இதழ்மணம்

உலகத்தாய்மொழி நாள் வாழ்த்துக்கள் வாசகர் அனைவருக்கும் உரித்தாகுக.

மதுரைத் தமிழ்ச்சங்கச் சான்றோர் விருது பெற்ற பெரும்புலவர் இரா.இளங்குமரன் அவர்களின் **"செந்தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும்"** என்னும் கட்டுரை இராமலிங்க விலாசமும் சோமசுந்தர விலாசமும் தமிழ்க் கோயில்களாகத் திகழும் வண்ணம் சேதுபதி பொன்னுச்சாமித் தேவர் அவர்களும் சேதுபதி பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களும் ஆற்றிய பணிகளைச் செம்மையாக எடுத்துரைப்பது இவ்விதழைச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளது.

பக்தி இலக்கியக்காலத்தில் உருவான பெண்களுக்கு எதிரான கருத்துக்கள் சித்தர்கள் காலத்தில் பெண்ணுடல் வெறுத்தலாக வளர்ந்தமையை **"சித்தர் பாடல்களில் பெண் உடல் சித்தரிப்பு"** என்னும் கட்டுரை ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளது.

மனிதநேயமிக்கவர்கள் தமிழர்கள் என்பதை, **'பண்டை இலக்கியங்களும் மனிதநேயமும்'** என்ற கட்டுரை வாயிலாக இணைப் பேராசிரியை முனைவர் செ.தனலக்குமி அவர்கள் தமிழுணர்வுடன் புலப்படுத்தியுள்ளார்.

பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் இடம்பெறும் எண்கள் கணிதமொழியாக வெளிவருவது கவித்தன்மையுடையதாக உள்ளது என்பதனை **"எண்கள்"** என்னும் கட்டுரை எடுத்தியம்பியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முற்பட்ட மொழியின் தொன்மைச் சிறப்புக்களை **"சங்க இலக்கியங்களில் சொற்கள் காட்டும் தொன்மை"** என்னும் கட்டுரையின் முதல்பகுதி வெளிப்படுத்தியுள்ளது.

நிலைத்த புகழ்பெற்ற வள்ளுவத்திற்கு எழுந்த உரைகளில் காணப்படும் முரண்களை எடுத்துக்காட்டும் வகையில் பெரும்புலவர் ப.அரங்கசாமி **'ஒரு குறள் பருப்பாடு'** என்னும் கட்டுரையில் ஒரு குறளுக்கு எழுதப்பட்ட உரையைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

பழந்தமிழ்மொழியின் சிறப்புக்களை நுட்பமாக எடுத்துக்காட்டுவதாக பிப்ரவரி மாத இதழ் அமைந்து சிறப்பாக உங்கள் கையில் திகழ்வதில் பேருவகை கொள்கிறோம்.

– முனைவர் *க.சின்னப்பா*

செந்தமிழ் வளர்த்த தந்தையும் மைந்தரும்

பெரும்புலவர் இரா.இளங்குமரன்

"பழந்தமிழ்ப் பதிப்புக்குக் 'கால்கோள்' செய்தவர் ஆறுமுக நாவலர்" என்பார் திரு.வி.க.

பொன்னுசாமித் தேவர், ஆறுமுக நாவலரைக் கொண்டு திருக்குறளைப் பரிமேலழகர் உரையுடன் வெளியிட்டார்.

"இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமித்- தேவர்" வேண்டுகோளின்படி, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலராய் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து வெளியிடப்பட்ட பதிப்பு இது.

சென்னைப் பட்டணம் வாணி நிகேதன அச்சுக் கூடத்தில் துன்மதி வருடம் வைகாசி மாதம் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு யுவ வருடம் ஆடி மாதம் வெளியானது. பதினோராம் பதிப்பு இரத்தாக்ஷி வருடம் ஆவணி மாதம் வெளிவந்தது. இவை முறையே கி.பி. 1861, 1875, 1924 ஆகும்.

இப்பதிப்பில் மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவர் மாணவர்கள் சி.தியாகராச செட்டியார், ச.தெய்வநாயகம்பிள்ளை, சோடசாவதானம் வீ.சுப்பராயச் செட்டியார், ஆகியவர்கள் இயற்றிய சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் உள்ளன.

ஒவ்வொரு பக்கத்தின் தலைப்பிலும் பக்க எண், அதிகார எண், அதிகாரப் பெயர் ஆகியவை அடங்கியுள்ளன. குறளுக்குத் தொடர் எண் கொடுக்கப்பட்டுள்ளது. அது, அவ்வக் குறளின் முன்னே கொடுக்கப்பட்டுள்ளது.

குறளின் இரண்டாம் அடி இறுதியிலும், அக்குறள் உரையின் இறுதியிலும் ஆகிய இரண்டு இடங்களிலும் அவ்வதிகாரத்தில் அக்குறள் எத்தனையாவது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

பயன்படுத்தப்பட்டுள்ள எண்கள் எல்லாமும் தமிழ் எண்களேயாம். எட்டுப்பக்கம் கொண்டது ஒருபடிவமாகப் படிவ எண்களும் தமிழ் எண்களேயாம்.

நூலின் மதிப்புச் சிறப்பு இன்றும் பாராட்டுத் தக்கதாகவே உள்ளது. அடிக்குறிப்பு, பால், இயல் அதிகார அகராதிகள், திருக்குறள் அகராதி என்பவற்றை நோக்க வியப்பினும் வியப்பாக உளது. ஏறத்தாழ நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிப்பு அல்லவோ அது? சேதுபதி மன்னர்களுள் ஒருவர் இராமசாமி சேதுபதி. அவர் துணைவியாம் அரசியார் பர்வதவர்த்தினியார். அவர்கட்கு மக்கட்பேறு இல்லை. சேதுபதி இயற்கை எய்தினார். அரசியார் உடன்பிறந்தாராகிய கோட்டைச்சாமித் தேவர் துணையுடன் ஆட்சி நடத்தினார்.

அரசியார்க்குத் தகுதிவாய்ந்த ஒரு மகனைத் தத்தாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் உண்டாகியது. அவர்க்கு உடன் பிறந்தார், புதுமடம் சிவஞானத்தேவர் துணைவியாராக இருந்தார். அவர் மகனைத் தத்தாகக் கொள்ள முடிவு செய்தார்.

சிவஞானத்தேவரின் மூத்தமகன் பொன்னுசாமி (1837) இளையமகன் துரைராசா (1841) இளையவரை அரசராகத் தேர்ந்து முத்துராமலிங்க சேதுபதி எனப் பெயர் சூட்டி அரசுப் பொறுப்பை வழங்கினார் (1847). சிவஞானத் தேவர் குடும்பம், இராமநாதபுரம் அரண்மனை ஆகியது. அவரும் அரசுக்குத் துணை நின்றார். அமைச்சர் கோட்டைச் சாமி மறைவின் பின் பொன்னுசாமித் தேவர் அமைச்சர் ஆனார்.

அமைச்சர் பொன்னுசாமித் தேவர் மகனார் பாண்டித்துரை (1867) அரசர் முத்துராமலிங்க சேதுபதியின் மகனார் பாற்கர சேதுபதி (1868) அரசரும் அமைச்சரும் ஆகிய உடன்பிறந்தார் போலவே, அவர்களின் மக்களும் விளங்கினர். தந்தையார் கொண்டிருந்த தமிழ்ப்பற்று, தமிழாய்வு, தமிழ்க்கொடை என்பவை நாடறிந்த பொருளாக இருந்தமையால், புலவர்கள் அவையமும், ஆய்வும், நூல் அரங்கேற்றமும் என நிகழ்வுகள் பெருகின.

இராமலிங்க விலாசம் தந்தையார் கண்ட தமிழ்க் கோயில் என்றால், பாண்டித்துரையார் முகவையில் சோமசுந்தர விலாசம் என மாளிகை எடுத்துத் தமிழ்க் கோயிலாக்கினார். ஒரு நாளுக்கு ஓர் அதிகாரமாகத் திருக்குறள் பரிமேலழகர் உரை விளக்கமாகத்

தொடர்ந்து நடத்தினார் பாண்டித்துரை. அதன்முன் திருக்குறள் வகுப்பைத் தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு நடைபெறச் செய்தவர் வள்ளலார் ஆவர்.

அடிக்குறிப்புகள் அரிய செய்திகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் குறள் விளக்கத்தில் பரிமேலழகர் "பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்" என்பதன் அடிக்குறிப்பாக, ஆன்முலை யறுத்த வறனிலோர்க்கு – மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும் – குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும் – வருவாய் மருங்கிற் கழுவாயு முளவே – நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன் – செய்தி கொன்றார்க்குய்தியில்லென் – றறம்பா ழன்றே யாயிழை கணவ – புறநானூறு, கழுவாய் – பிராயச் சித்தம்" என்று எழுதியுள்ளமை நுண்ணிதின் நோக்கத்தக்கதாம்.

ஒரச்சுப் பிழைதானும் காணமுடியாப் பதிப்பு ஆறுமுக நாவலர் பதிப்பு. அப்பதிப்பிலே கண்ட ஏட்டுப் பாட வேறுகள் சிலவற்றைக் காட்டிச் செப்பப்படுத்த உதவியது செந்தமிழ் இதழாகும். அதனை எழுதியவர் இரா.இராகவ ஐயங்கார்.

திருக்குறள் பரிமேலழகர் உரை ஏடுகள் தமிழ்ச் சங்கத்தில் இருந்தன. அவை பழமையானவை. ஆழ்வார், திருநகரித் திருமேனிக் கவிராயர் ஏடு கொல்லம் ஆண்டு 868இல் எழுதப்பட்டது. மற்றவை திருச்சுழியில் சோமசுந்தரக்கவிராயர், திருநெல்வேலி திருப்பால் கடல்நாதகவிராயர், துன்படக்கி கோட்டை முத்துவயிரவநாதப் புலவர் முதலாய தமிழறிஞர்கள் ஏடுகள். இவ்வேடுகளோடு அச்சிட்ட நூல்களை ஒப்பிட்டுக் கண்டு தெளிவு காட்டியது செந்தமிழ்.

"எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்"

இதன் உரையில் நிகழ்வன எல்லாம் என்றது நல்லவும் தீயவும் ஆய சொற்களையும் செயல்களையும் அவை நிகழ்ந்த பொழுதே அவற்றிற்குத் தக்க வழியாகத் தேறுதலாகச் செய்ய வேண்டுதலின் வல்லறிதல் என்று அச்சுப்படியில் இருந்தது. ஆனால் ஆழ்வார் திருநகரி ஏட்டில் மேலே கீழ்க் கோடிட்ட இடத்து, தக்க அளியாக தெறலாக என்று இருந்தது.

இப்பாடமே,

"கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க் களித்தலும்" (புறம் 29)
"தெறலும் அளியும் உடையோய்" (புறம் 2)
"அளியும் தெறலும் எளிய வாகலின்" (பெரும்பாண்)

எனவரும் நல்லிசைப் புலவர் சொல்லையும் பொருளையும் பொன்போல் போற்றிப் பொலிகின்றது.

தக்க அளியாக என்பது புணர்த்தெழுதப்பட்டுழித் 'தக்கவளியாக' என்றிருப்பது தக்கவழியாக எனவும், தெறுதல் தெறல் என்பன 'தேறுதல் எனவும் பாடம் எழுதினோரால் எழுதப்பட்டன போலும் என்று மேலும் விரித்துக் கூறுகிறார் இராகவர்.

"உப்பமைந்தற்றாம் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்"

இதன் உரையில், புலவி இலவி இன்பம் செயற்கு வேண்டுமளவிற்றாதல் உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவையாக்கற்கு வேண்டும் அளவிற்றாதல் போலும் என்பது அச்சுப்படியில் உள்ளது.

திருச்சுழியில் ஏட்டுப்படியில் மேற்கீழ்க் கோடிட்ட இடத்து இன்சுவைய வாக்கற்கு என்றுள்ளது. இவ்வேட்டுப்படியிற்கண்ட பாடம் குணி குணங்கட்கு வேற்றுமை புலப்பட நிற்பதும், அச்சுப்படிப் பாடம் அவ்வாறின்றி மயங்க நிற்பதையும் காட்டி, மேலும்,

பாலொடு தேன் கலந்தற்றே என்னும் திருக்குறள் உரையில் வேறு வேறு அறியப்பட்ட பல சுவையவாய பாலும் தேனும் கலந்துழி-எனக் கூறப்பட்டதும் காண்க என்கிறார்.

"நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் நோய் செய்யார்
நோயின்மை வேண்டு பவர்"

இதன் உரையில் உவர் நிலத்தில் விளைவித் திட்டார்க்கு விளைவும் அதுவே யாகலின் நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் என்றார் என்பது அச்சுப் பாடம். துன்படக்கிக் கோட்டைப் படியில், மேற்கீழ்க் கோடிட்ட இடத்து, 'உயிர் நிலத்து விளைவித்திட்டார்க்கு' என்றுளது. இவ்வேட்டுப் பாடல்,

"வெவ்வினை செய்ய மாந்தர்
உயிரேனும் நிலத்து வித்தி
அவ்வினை விளையுள் உண்ணும்
அவ்விடத் தவர்கள் துன்பம்"

என்னும் சிந்தாமணிக்கும், அதன் உரைக்கும் இயைந்து விளங்குவது கண்டு கொள்க என்கிறார்.

செந்தமிழில் வந்த இந்த ஆய்வின் பயன் என்ன? 1903ஆம் ஆண்டுக்கு முன் வெளிவந்த திருக்குறள் பரிமேலழகர் உரையில் புகுந்துவிட்ட மூன்று குறைகள் விலக்கப்பட்டன. நாவலர் தம் தகவார்ந்த பதிப்பும் போற்றிக் கொண்டது.

சித்தர் பாடல்களில் பெண் உடல் சித்தரிப்பு

முனைவர் *தே.ஞானசேகரன்*, தமிழ் இணைப் பேராசிரியர்,
கோவை

சென்ற இதழ்த் தொடர்ச்சி

காமம், வெகுளி, மயக்கம் இவற்றை அடக்கி உடம்பைப்பேணி, உடம்பின் மீதுள்ள பற்றை நீக்கி சிவனைச் சிந்தித்து வாழ்பவர்களே சித்தர்கள் என்று சொல்லப்படுவதற்கு ஏற்ப இவர்கள் உலக வாழ்வைத்துறந்து; ஊன் பொருந்திய (உடல்) இப்பிறப்பின் தொடர்பு நீக்கி மரணமிலாப் பெருவாழ்வு எய்திட்டவர்கள் என்று சொல்லப்படுகிறது. மேலும் சித்தர்களில் சிலர் "ஊனில் உயிர்ப்பை ஒடுக்கியவர்கள்" "மூச்சை வெளிவிடாமல் உள்ளே நிறுத்திவிட்டவர்கள்". பட்டினத்தார், பாம்பனடிகள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள் ஆவார். இவர்களல்லாது பல சித்தர்கள் அதாவது காயசித்தி பெற்ற பல சித்தர்கள் தம் உடம்பு நிலத்தில் விழாமல் பரவெளியில் கலந்துவிட்டவர்களும் உண்டு. தேவாரம் பாடிய நால்வர் பெருமக்கள் சமாதி ஆகாமல் சிவபெருமானோடு ஐக்கியம் அடைந்தார்கள் என்று நம்பப்படுகிறது. இராமலிங்க அடிகளாரும் இவ்வாறே இறைவனோடு ஒன்றிப்போனார் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு இறைவனிடம் மனம் ஒன்றி அவனுடன் கலத்தல் அவ்வளவு எளிதன்று; இந்த இறையனுபவம் உலக இன்பங்களைத் துறத்தலால் வருவது. இதற்குப் பெருந்தடையாய் இருப்பது பெண் உடல் என்று பௌத்தமும் சமணமும் வேதமரபும் முன்வைத்த சிந்தனை தமிழ் இறைநெறியில் கலந்து பிற்காலச் சித்தர்களின் பாடல்களில் பெரிய விவாதப் பொருளாக முன்வைக்கப்பட்டது. பக்தி இயக்கக் காலப்பகுதியிலே முக்தி வழிக்குப் பெண்கள் முட்டுக்கட்டைகளென்று கருதப்பட்டனர். ஜீவாத்மா பரமாத்மாவுடன் சங்கமமாகி முக்தி பெறுவதற்குப் பெண்கள் இடையூறாக விளங்கினரென்று காட்டப்பட்டது. திருவாசகப் பாடல்களிலே பெண்களின் சாகசங்கள் உலக சிற்றின்பச் சூழலின் சின்னங்களென்று மாணிக்கவாசகர் சிந்தித்தார். "பெண்களின் மாய வலையிலிருந்து தன்னை மீட்டருளுமாறு அவர் சிவனை இறைஞ்சுகிறார். பெண்ணின் அங்க

அழகின் மாயையில் மயங்கிச் செய்வதறியாது தவிப்பதாகப் பிரவாபிக்கிறார்". இதே தவிப்பு கொஞ்சம் கூடுதலாக அதுவும் பெண் உடலை வெறுப்பதாகச் சித்தர் பாடல்களில் அமைகின்றது.

பொதுவாகச் சித்தர் பாடல்கள் அன்றைய சமய நிறுவனங்களில் காணப்பட்ட வைதீக நெறிகளை, சடங்குகளை, ஆசாரங்களை, வர்ணாசிர முறைகளை, போலியான துறவறத்தை விமர்சனம் செய்வதாக அமைந்தன. ஆனால் இறைவனை அடைதலில் மனித உடல் இடையூறாக அமைகிறது; அது நிலையாமையுடையதென்னும் கருத்து பிற்காலச் சித்தர்களின் பாடல்களில் நிரம்ப இடம்பெற்றது. இதில் பெண்ணுடல் முழுவதுமாக வெறுக்கத்தக்கது என்று பாம்பாட்டிச்சித்தர், அழுகணிச்சித்தர், கொங்கணச்சித்தர், பட்டினத்தார் போன்றவர்கள் பாடினாலும், பட்டினத்தார் பாடல்கள் பெண் உடலை முழுவதுமாக வெறுக்க வேண்டுமென்ற தொனியில் சில கருத்தாக்கங்களை முன் வைக்கின்றன. பட்டினத்தாரின் பெண் உடல் குறித்த இந்தச் சிந்தனைகள் திடீரென தமிழ்ச் சமூகத்தில் தோன்றவில்லை; என்றாலும் இவர் சார்ந்த சைவ மதம் பெண் உடலை ஏற்றும் மறுத்துமே வளர்ந்துள்ளது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இறைவனை நெருங்குவதற்கு ஆணின் உடலே அழுக்கானதாகக் கருதப்படும்போது மாதவிலக்கு, பிள்ளைப்பேறு என்பவற்றுக்கு ஆளாகும் பெண் உடல் எல்லாக் காலங்களிலும் விலக்கப்பட்டே வந்திருக்கின்றது. உலக வழக்கில் ஒரு பெண் பூப்புக்கு முன்பும் (சிறுமி) பின்பும் (வயதானபின்) கோயிலுக்குள் தடையின்றி நுழைய விலக்கற்றவளாகவும் கருதப்படுகிறாள் என்பதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். பூப்புக்காலம் பெண் உடலை அழுக்கானதாக மட்டும் சமூகத்திற்குக் காட்டவில்லை; அவள் அச்சத்திற்குரியவளாகவும் காட்டியது. வயது வந்த ஒரு பெண் ஒரு ஆணுடன் தனித்து நின்று பேசக்கூடாது; இன்னும் ஏன் பெண் சிரிச்சு பேசக்கூடாது. ஆணின் துணையின்றி பெண் எங்கும் செல்லக்கூடாது; வயது வந்தவளை வீட்டில் வைத்திருப்பது நெருப்பை மடியில் கட்டியிருப்பதற்குச் சமானம் என்றெல்லாம் பேசி; ஒருவனுக்கு மணம் செய்து தரும்வரையும் அதன் பின்பும் அவள் உடல் கண்காணிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வரப்படுகிறது.

ஒருவனுடன் மட்டுமே வாழும் பெண் உடலை ஆண் சமூகம் புனிதமாகக் கருதி ஏற்றியும் போற்றியும் வந்திருக்கின்றது. பெரும்பாலான ஆணின் புத்தி பெண்ணைக் கண்காணிப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்தியுள்ளதை ஆணின் தொல் மன நடத்தையிலிருந்து நாம் தெரிய முடியும். காட்டாக இராமன் சீதையை ஐயுறுதல் என்பது அந்தக் கதையோடு மட்டும் தொடர்புடையதல்ல. அது ஆணின் தொல்மனப் படிமம் என்றும் பொதுப்புத்தி என்றும் நாம் சொல்லிவிட முடியும். பிற ஆடவனின் ஆக்கிரமிப்புக்கு ஆளான பெண் அவனின் வலிமைக்குள் அகப்பட்டே இருப்பாள் என்ற ஐயுறவின் வெளிப்பாடே இராமனின் சந்தேகம். காரணம் ஆண், பெண் இருவருமே தனது வலிமையால் பிறரை ஆளுமை செய்ய முயல்வர் என்ற சிந்தனை மனித குல வரலாறு முழுவதிலுமே இருக்கிறது. சூர்ப்பனகை தனது வலிமையால் ராமன், இலக்குவனனை அடைய முயலுதல் இதற்குச் சான்று. பார்வதி குளிக்கும் போது தனது அழுக்கால் செய்த விநாயகர் உருவத்திற்கு உயிர் கொடுத்து காவலுக்கு நிற்க வைத்துக் குளிப்பதும் சிவன் திடீரென அப்பகுதியில் நுழையும்போது விநாயகர் தடுப்பதும் கோபமுற்ற சிவன் விநாயகரின் தலையைத் துண்டித்து விடுதலும், எல்லாம் பெண் உடல் மீது ஆணுக்கு இருக்கும் கண்காணிப்பு உளவியலின் வெளிப்பாடு தான். இந்த ஆணின் பொதுப் புத்திக்குப் பட்டினத்தாரின் பின்வரும் பாடல் நேரடிச் சான்றாக அமைகிறது எனலாம். அப்பாடல் வருமாறு;

“கைப்பிடி நாயகன் தூங்கையிலே அவன் கையெடுத்து
அப்புறந்தன்னில் அசையாமல் முன்வைத்து அயல் வளவில்
ஒப்புடன் சென்று துயில் நீத்துப் பின் வந்து உறங்குவ
எப்படி நான் நம்புவேன் இறைவா கச்சி ஏகம்பனே!”

இப்பாடலில் கணவன் தூங்கும்போது அவனுக்குத் தெரியாமல் பிற ஓர் ஆடவனுடன் பாலியல் உறவு வைத்துவிட்டு பின்பு ஒன்றும் தெரியாதது போல் உறங்கக்கூடியவள் பெண் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளது. இப்படியான சந்தேக மனநிலை தான் பட்டினத்தாரின் பாடல்களில் பெண்வெறுப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த மனநிலை தான்,

“எத்தனையோ நட்ட குழி, எத்தனை பேர் தொட்ட முலை
எத்தனைபேர் பற்றி இழுத்த இதழ் – நித்தம் நித்தம்
பொய்யடா பேசும் புவியில் மட மாதரை விட்டு
உய்யடா உய்யடா! உய்!”

என்றும்,

“காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டி என்
கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலி விட்ட
தூதென் றெண்ணாமல் சுகமென்று நாடும் இத்துற்புத்தியை
ஏதென் றெடுத்துரைப்பேன் இறைவா கச்சி ஏகம்பனே”

என்றும்,

“பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடி தடத்துப்
புண்ணாய் குழியிடைத் தள்ளி என் போதப்பொருள் பறிக்க
எண்ணாதுனை மறந்தேன் இறைவா கச்சி ஏகம்பனே!”

என்று பாட வைக்கிறது. மேற்கண்ட நான்கு பாடல்களில் இடம்பெறும் கருத்துக்கள் எவையென்று பார்த்தால்,

1. பெண்ணும், பெண்ணுடலும் நம்பத்தகுந்தவை அல்ல.
2. பெண் உடல் பல ஆணுடலை விரும்பும் வேட்கையுடையது.
3. பெண் உடல் ஆண்களை எப்பொழுதும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மாயப் பிசாசு

என்று நாம் தெரிய முடியும். இக்கருத்துக்களைப் பட்டினத்தார் திட்டமிட்டுச் சொன்னாரா! அல்லது பெண் வழிச் சேரல் தீமை பயப்பது என்பதை வலியுறுத்துவதற்காகச் சொன்னாரா என்பதைவிட ஓர் ஆணின் நிலையிலிருந்து கொண்டு பெண் குறித்த ஒரு பொதுவான கருத்தை அவர் உருவாக்க முயன்றுள்ளார் என்றே சொல்ல வேண்டியிருக்கின்றது. காரணம் பட்டினத்தார் செல்வம் கொழிக்கும் வணிகத் தொழில் செய்து, திரைகடலோடி திரவியம்

தேடியவர். மனைவியைப் பிரிந்து வணிகத்திற்காகப் பல ஊர் சுற்றிய காலத்தில் பல பெண்களுடன் ஏற்பட்ட தொடர்பும் அதனால் ஏற்பட்ட வெறுப்பும் சுய அனுபவமாகி துறவின் பின்பு வெளிப்பட்டிருக்கின்றது என்று ஒரு வாதத்திற்காகக் கொண்டால், இவர் காட்டும் பெண்கள் "பரத்தையர்" என்று ஆகிவிடும். ஆனால் இவரின் கதையாடலில் இவர் காட்டும் பெண்கள் பரத்தையர் மட்டுமே என்று அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. பெண்கள் என்று பொதுமைப்படுத்தியே பாடுகின்றார். இதற்குள் பரத்தையரும் அடங்குவர் என்று வேண்டுமானால் சொல்லலாம். ஏனென்றால் பட்டினத்தார்,

"*இல்லாளும் சுற்றமும் மைந்தரும்*
வாழ்வும் எழில் உடம்பும்
எல்லாம் வெளி மயக்கே இறைவா"

என்று மனைவியையும் வேசம் போடும் மாயக்காரியென்றே சொல்கிறார். இது மட்டுமல்ல பட்டினத்தார் காட்டும் பெண் உடல், பெண்ணின் தலை முதல் கால் வரை வெறுக்கத்தக்கதாய் அசுத்தமானதாய் இருப்பதைப் பல உருவகங்கள் வாயிலாக சித்தரிக்கின்றார். அவை வருமாறு:

உடல்

"*ஊத்தைச் சரீரம்*
புழுக் கூடு
ஊன் பொதிந்த பீக்குத் துருத்தி
சோறிடும் தோற்பை
நிலையற்ற பாண்டம்
பிண கொடி நாறும் அங்கம்
மலம் நாறும் காயம்
சீழ் வடியும் ஒன்பது வாய்புண்"

இப்படி பெண் உடல் பல உருவகங்களால் அழுக்கானது என்று பல பாடல்களில் சித்தரிக்கப்படுகிறது)

கூந்தல்:

"*கையும் எண்ணெயும் கலவாது ஒளிரில்*
வெய்ய அதிரும் பேனும் விளையத்
தக்க தலை யோட்டால் முளைத் தெழுந்த
சிக்கின் மயிரை திரள் முகிலென்றும்"

(ஈரும், பேனும், பொடுகும் ஆட்சி செய்யும் சிக்குப் பிடித்த மயிர் திரள் கூந்தல். அது கார் முகிலல்ல)

கழுத்து:

"வேர்வையும் அழுக்கு மேவிய கழுத்தை
பாரினில் இனிய கமுகெனப் பகர்ந்தும்"

(வேர்வையும் அழுக்கும் உறைந்திருக்கும் இடம் கழுத்து – கமுகு அல்ல)

கண்:

"தண்ணீர் பீளை தவிராது ஒழுகும்
கண்ணைப் பார்த்து கருநீர் என்றும்"

(பீளை ஒழுகும் கண் கரு நீல மலர் அல்ல)

காது:

"உள்ளுங் குறும்பி ஒழுகுங்காதை
வள்ளைத் தண்டின் வளம் என வாழ்த்தியும்"

(குறும்பி ஒழுகுங்காது – அது வள்ளைத் தண்டல்ல)

மூக்கு:

"நீரும் சளியும் நின்று ஒழுகும்
கூரிய மூக்கை குமிழ் எனக் கூறியும்"

(சளி ஒழுகும் துவரம் – குமிழம்பூ அல்ல)

வாய்:

"வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்.
துப்பு மூக்கின் தூய் மலர் என்றும்"

(ஊத்தையின் இருப்பிடம் வாய் – மலரல்ல)

பல் :

"அன்னமும் கறியும் அசை விட்டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்"

(சோறும், கறியும் தினமும் மெல்லும் குணமுடையது பல் – முத்தல்ல)

கரங்கள் :

"நீட்டவும் முடக்கவும் நெகும் பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவும் உதவி இங்கியற்றும்
அங்கையை பார்த்து காந்தள் என்று உரைத்தும்"

(சாப்பிடவும், மலம் கழுவவும் பயன்படுவது கைகள் – காந்தள் மலரல்ல)

இடை:

"நெகும் உடல் தாங்கி நின்றிடும் இடையைத்
துடிபிடி என்று சொல்லித் துதிக்கும்"

(உடலைத் தாங்குவது இடை – அது துடி அல்ல)

வயிறு:

"மலமும் சலமும் வழும்பும் திரைக்கும்
அளையும் வயிற்றை ஆலிலையென்றும்"

(வயிறு மலமிருக்கும் பாளை – ஆலிலை அல்ல)

கால்கள்:

"முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங்காலை பஞ்செசன உரைந்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வரால் என சொல்லித் திரிந்தும்
தசையும் எலும்பும் தக்க புன் புரங்கை
இசையும் கதலித் தண்டென இயம்பியும்"

(உள்ளங்கால் முள்ளில் நடப்பது, அது பஞ்சல்ல எலும்பால் ஆனது கணைக்கால் வரால் மீனல்ல. தசையும் எலும்பும் சேர்ந்தது. தொடை வாழைத் தண்டல்ல)

இவ்வாறு பெண்ணின் உடல் உறுப்புக்களை வெறுத்து ஒதுக்கும் சிதறிப்புக்கள் ஏன் தோன்றின என்று பார்த்தோமானால் அதாவது சங்கப்பாடல்களில் பெண்களின் உடலை அழகின் சொரூபமாக கண்டிருக்கையில் சங்கம் மருவிய காலத்திற்குப் பின்னர் தோன்றிய நீதி இலக்கியக் காலத்திலும் பிற்காலச் சித்தர் இலக்கியக்

காலத்திலும் "பெண் உடல் ஒரு பயமுறுத்தலாக அமைந்த காலமாகும். காம ஆசையை ஒறுத்து உலகைத் துறக்க விழைந்த பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் அது ஒரு தீமையின் ஈர்ப்பு மையமாகவே இருந்தது. இலக்கியங்களிலும் கூட இத்தகைய உணர்வுகள் யாவும் கலந்திருந்தன" என்பதற்கேற்ப பட்டினத்தாரின் பாடல்களில் பெண்ணுடல் ஒரு பயமுறுத்தலாகவும் ஆணை ஈர்க்கும் காமக்களனாகவும் கருதப்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். பாம்பாட்டிச் சித்தர் பெண்ணாசை விளக்கம் எனும் தலைப்பில் பெண்ணுடலைப் பட்டினத்தார் போன்றே சித்தரிக்கின்றார்.

"வட்டமுலையென்று மிக வற்றுங்தோலை
மகமேரு என உவமை வைத்துங் கூறுவார்
கெட்ட நாற்றமுள்ள யோனிக் கேணியில் வீழ்ந்தார்
கெடுவர் என்றே துணிந்து ஆடு பாம்பே"

என்று ஆரம்பிக்கும் பாம்பாட்டிச் சித்தர் கண், கூந்தல், கொங்கை, எச்சில் அனைத்தும் அழுக்கானவை என்று மட்டும் சொல்லாமல் பெண்ணை மானே, தேனே, பூவே, மின்னலே, மயிலே என்று எண்ணாத மனம் வேண்டுமென்று சிவனிடம் வேண்டிப்பாடுகின்றார். அதே நேரத்தில் பெண்ணில்லாமல் ஆணில்லை; ஏன் உலகமே இல்லை என்று பாடிய சித்தர்களில் கொங்கனச் சித்தரின் சிந்தனை குறிப்பிடத்தக்கது.

"மண்ணுமில்லாமலே விண்ணுமில்லை கொஞ்சம்
வாசமில்லாமலே பூவுமில்லை
பெண்ணு மில்லாமலே யாருமில்லை மிது
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே
மாதாவாய் வந்தே அமுதந்தந்தாள் மனை
யாட்டியாய் வந்து சுகங்கொடுத்தாள்
ஆதரவாகிய தங்கையானாள் நமக்
காசைக் கொழுந்தியு மாமியானாள்"

என்று பெண் பிறப்பு ஆசையான பிறப்பு; இந்த உலகை வாழ வைக்கும் பிறப்பு; அவளில்லாமல் இந்த உலகில் எதுவுமில்லை என்று பாடியிருப்பதையும் பார்க்கின்றோம். அதே நேரத்தில் வாழ்க்கை நிலையில்லாதது என்று சொல்லி பெண்டாட்டி மந்தை மட்டும்

வருவாள், பெற்ற பிள்ளை இடுகாடு வரை வருவான், செய்த தர்மம்தான் கடைசிவரை வருமென்று வாழ்க்கை நிலையாமை பற்றியும் இவர் பாடத்தவறவில்லை. ஆனால் பட்டினத்தார் மட்டும் பெண்ணை மிகக் கடுமையாக வெறுப்பவராகக் காணப்படுகின்றார்.

"தாயும் பகை, கொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும் பகை உறவோரும் பகை ...."

என்று பாடுவதில் இவரின் தனித்த படைப்பாளன் உளவியல் பதிவாகியிருக்கின்றது என்றும் நாம் கருதமுடியும். ஏனென்றால் தாய், மனைவி, சுற்றம், பெண்டிர் என்று தன்னைச் சுற்றியுள்ள உறவுகள் எல்லாம் தான் தாழ்நிலையடையும் போது நீ யார்? நானார்? எனப் பகர்வர் என்று பாடுகின்றார். இவரின் பாடல்களில் அடிக்கடி மையாடும் கண்ணையுடைய பெண்டிர் வந்து இவரை மருட்டுகின்றனர்; இதனால் மனம் காமத்தில் வீழ்ந்து பேயாகி விழிக்கின்றது என்று பாடுகின்றார். பெண்ணுடலை மறுப்பதற்கு எழுந்த இவரின் சிந்தனை இவரின் தனித்த உளவியலால் பெண்ணுடல் வெறுப்பாக அமைந்துவிடுகிறது.

"வாய் நாறும் ஊழல் மயிர்ச்சிக்கு
நாறிடும் மை இடும் கண்
பீநாறும் அங்கம் பிணவெடி
நாறும் பெருங்குழியாம்ச்
சீநாறும் யோனி அழல் நாறும்
இந்திரியச் சேறு சிந்திப்
பாய் நாறும் மங்கையர்க்கோ இங்ங
னமே மனம் பற்றியதே"

எனும் பாடலில் பல இடங்களில் உதிரி உதிரியாகப் பெண்ணுடலை அழுக்கானவை; இழிவானவை என்று சொல்லி வந்தவர் ஒரே பாடலில் பெண்ணுடல் முழுமையையும் தொகுத்துச் சொல்லி அவளுடன் படுத்து எழும் பாயும் நாறும் என்று சொல்வதைப் பார்க்கின்றோம். பட்டினத்தார் பெண் உடலைத் துறப்பதற்குப் பெரிய சிரமப்பட்டுள்ளார் என்றும் இவரது கதையாடல்களிலிருந்து தெரியமுடியும். துறப்பதில் பெரிய மதிப்புடையது இல்லறத்தைத் துறப்பது என்றும் அது கோடி மதிப்புடையது என்றும் இவர் பாடுகின்றார்.

இதுவரை நாம் பார்த்த சித்தர்களின் பாடற்கருத்துக்கள் பெண்ணுடலை அழுக்கானது என்றும், தூய்மையற்றது என்றும் சொல்லி இதனுடன் ஆணுடல் சேர்தல் துன்பத்தின் தொடக்கம் என்று வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது எனலாம். பட்டினத்தாரின் பாடல்களில் இடம்பெறும் பெண்ணுடல் வெறுப்பை பெண்ணுடல் மீது அவருக்கு ஏற்பட்ட சலிப்பாகவும் கருத இடம் இருக்கிறது. ஒன்றை அதிகமாக அனுபவிக்கையில் அதன் மேல் சீக்கிரமே சலிப்பு ஏற்பட்டுவிடும். இன்னும் ஏன்? நாம் எதை அதிகம் பயன்படுத்துகிறோமோ அதைப் பயன்படுத்த முடியாமலும் போய்விடவும் கூடும். இதில் காமமும் விதிவிலக்கல்ல. பெண் மறுப்பை உலக நியதியாகச் சொல்ல வந்த பட்டினத்தார் அதற்கு மேலே போய் பெண்ணுடலை முழுவதும் வெறுத்தொதுக்கும் அளவுக்குப் போய்விடுகின்றார். வெறுத்தொதுக்குதல் என்பது "சட்டிசுட்டதடா! கைவிட்டதடா! என்ற வாழ்வியல் தத்துவத்துடன் தொடர்புடையது ஆகும். பட்டினத்தார் பாடல்கள் மட்டுமல்ல. பல சித்தர்களின் பாடல்களும் உடம்பைப் பேண வேண்டும் என்றும் காமத்தால் கெட்டுப்போய் விடக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்யும் பாணியுடையது போல் இருப்பினும்; ஆணின் மனம் பெண்ணின் உடலை ஏன் கேளிக்கை (சுகம்) தேடும் களமாக ஏற்கிறது என்ற சிந்தனை எழுவது இயற்கை. ஆண், பெண் சேர்க்கை குழந்தைப் பிறப்பிற்கு மட்டுமே என்பது மாறி அவை இன்பம் என்று மனித மனம் ஏற்கத்தொடங்கிய காலகட்டத்திலேயே பெண்ணுடல் குறித்த பல புனைவுகளையும், கேள்விகளையும் ஆண் எழுதத் தொடங்கி விட்டான். இதுவே எல்லாக் காலத்திலும் நீண்டு கொண்டு இருக்கிறது. இதுவரை ஆண் பெண்ணுடல் குறித்துக் கண்டுபிடித்த ஒரே விடை "பெண் ஆழம் காண முடியாத கடல்" என்பதே ஆகும். அதே நேரத்தில் "ஆணை முழுமையாக்கும் நோக்கங்களை மையமாக வைத்து பெண்களின் மீது வெறுப்பையும் அவர்களை இழி பிறவிகள் என உணரவைக்கவுமான புனைவுகளையும் மதங்களையும்

தத்துவங்களையும் ஆண் உருவாக்கினான்" என்ற அனிஸா கூற்றுப்படி பார்த்தால் பெண்ணுடலை வெற்றி கொள்ள முடியாத ஆணின் இயலாமையின் வெளிப்பாடுகள் தான் சித்தர் பாடல்களில் இடம்பெறும் பெண்ணுடல் மீதான சித்தரிப்புகள் எனலாம்.

தொகுப்புரை

தாய் வழிச் சமூகத்தில் ஆற்றல் மிக்கவளாக மதிக்கப்பட்ட பெண்; தந்தை வழிச் சமூகம் தோன்றியபின் பலவீனமானவளாக ஆண்களால் சித்தரிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டாள். இந்தியச் சிந்தனை மரபில் பாலியல் ஏற்பும் மறுப்பும் சமயம் சார்ந்ததாகவும் ஆன்மீகம் சார்ந்ததாகவும் பார்க்கப்பட்டு, துறவு, புலனடக்கம் என்று பாலியலை முறைப்படுத்தும் பணிகளையும் சமய நிறுவனங்கள் செய்து வந்திருக்கின்றன.

புத்த மதம், சமண மதக்கருத்துக்களில் பெண்ணுடம்பு அழுக்கு நிறைந்தது. தீட்டானது என்றும் உலகத் துன்பத்திற்குப் பெண்ணே காரணமென்றும் கருதப்பட்டு பரப்பப்பட்டன. இக்கருத்து இந்து மதத்திலும் எதிரொலித்தது. சமண, பௌத்த மதங்களில் பெரிய வரவேற்பைப் பெற்ற துறவறம் அதாவது பெண்ணைத் துறத்தல் துறவறத்திலேயே அதிக மதிப்புடையதாகப் போற்றப்பட்டது. இதனடிப்படையில் சங்கமருவிய காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்களில் பெண்களுக்கு எதிராகப் பல கருத்துக்கள் உருவாக்கப்பட்டன. இந்த நிலை பக்தி இயக்கக்காலத்திலும் தொடர்ந்து சித்தர் இலக்கியங்களில் பெண்ணுடல் வெறுத்தல் எனும் அளவிற்குச் சென்றது.

பண்டை இலக்கியங்களும், மனிதநேயமும்

முனைவர். செ.தனலெக்குமி, இணைப்பேராசிரியை,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை – 1

பண்டைக்காலம் என்பது சங்ககாலமும் அதற்கு முந்தைய வேத, புராண, இதிகாச காலங்களுமாகும். காலம் காட்டும் கண்ணாடி எனும் இலக்கியங்களே அக்கால மனிதநேயத்தைப் படம்பிடித்துக் காட்டும் சான்றாதாரங்களாகும்.

சங்ககாலம் "பொற்காலம்" எனப் போற்றப்பட்டமைக்கு மிகப் பெரிய காரணங்களுள் ஒன்று மனிதநேயமாகும்.

அரசியல் பிழையா தறநெறி காட்டிப் பெரியோர் சென்ற வடிவழிப் பிழையாது குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின் வழிவழிச் சிறக்க நின்வலம்படு கொற்றம்" என்ற மதுரைக் காஞ்சியின் வரிகள் மன்னராட்சிக் காலத்தே முன்னோர் போற்றி வாழ்ந்த வழியிலே, வெற்றி பெற்ற வாழ்வு மேற்கொண்டதாகக் கூறுகிறது. முந்தைய இராமாயண காலத்து இராமனைக் கம்பன் 'மானுடம் வென்றதம்மா' எனப் புகழ்கிறான். மனித நேயமிக்க கம்பன் கண்ட மானுடன் இராமனேயாவான். வடக்கே அயோத்தியிலிருந்து வனவாசம் புறப்பட்ட இராமன் தென்னிலங்கை வரை பயணப்பட்டு இப்பாருக்குக் கற்றுத்தந்த பாடமாவது, அரச குமாரனான இராமன் கல்லாத வேடுவன் குகனையும், குரங்கினத்துச் சுக்ரீவனையும், மனைவியைக் கவர்ந்த அரக்கர் குல இராவணனின் தம்பி விபீடணனையும் அரவணைத்து,

"குகனொடும் ஐவரானோம் முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய; நின்னொடும் எழுவர் ஆனோம்;
புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை"

(கம்ப – யுத்தகாண்டம் – வீடணன் அடைக்கலம் – 143) என்று சாதி மத பேதமற்றுக் காக்கை, குருவி எங்கள் சாதி எனப் பாராட்டிய பாரதிக்கு முன்னோடியானார். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் எனும் மூன்று குறிக்கோள்களையும் கதைகள் மூலமாகப் பதிவு

செய்தது எற்றுக்கெனச் சிந்தித்தால் 'எல்லாம் ஒன்றே' எனும் பக்குவம் மானுடர்க்கு வேண்டும் என்பதற்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கிற–தென்பது புலனாகும்.

தொடர்ந்து பாரதப் போரிலும் இப்பண்பாடு மிகுதியும் போற்றப்பட்டமை யாவரும் அறிந்ததே. பாண்டவர் படையோடு நிற்கும் அர்ச்சுனன், எதிரிப் படையில் கௌரவர் பக்கம் நிற்கும் குருநாதர்களாகிய துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், குலமூத்தோர்களாகிய பீஷ்மாச்சாரியார் போன்றோர்க்குப் பாதசரணம் செய்ய அம்புகளை விடுத்து ஆசிர்வாதம் பெற்றதும் பகைவன் மகன் அரவான் துரியோதனன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கப் போருக்கு நல்ல நாள் குறித்துக் கொடுத்து அருளினான் என்பதும் எதிரியாய் நின்ற தருமனிடம் உண்மை அறியும் பொருட்டுச் செத்தது அசுவத்தாமாவா? எனத் துரோணர் கேட்டுக் கொண்டதும் இன்றும் பாராட்டுதற்குரிய மனிதநேயம் மிகுந்த பண்பாடாகும்.

இவர்களின் வழித் தோன்றல்களாகிய பாரத தேச மன்னர்களும் மனித நேயமுடையோராய்ப் புலவர்பாடும் புகழ் ஒன்றே குறிக்கோளாய் வாழ்ந்து காட்டினர். தன்னுடைய மானுடப் பண்பு தாழ்ந்து வாழ்வதிலும் அழிவதே மேல் எனக்கருதினர். தன் வெண் கொற்றக் குடையின் கீழ்வாழும் மக்களை வருத்தும் மாற்றானை வீழ்த்தி, மக்களைக் காக்கும் கடப்பாட்டிலிருந்து தவறுவேனாயின்,

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை" புறம்: 72 (13–16)

நான் தென்புலங்காவலின் நீங்கி வடபுலங் காவலின் பிறப்பேனாகுக எனத் தன்னையே தண்டித்துக் கொள்ளும் பண்டைத் தமிழனின் மனிதநேயம் வணக்கத்திற்குரியதாகும்.

"புகழெனின் உயிருங் கொடுக்குவர் - பழியெனின்
உலகுடன் பெறினும் வேண்டலர்" (புறம்:182)

எனும் பண்பாடே மனிதநேயமாய் மலர்ந்திருந்த நற்காலம் அது.

" கடம்முகந்து தீம்பெயலை ஊழ்க்கும் எழிலி
மடமுடையோர் கோது அகற்று மாண்புறுத்தல்
படைத்து ஆக்கல் பண்புடையோர் சால்பு".

இன்னிலை – 9

என்ற நேயமே பின்பும் உன் வலது கன்னத்தில் அறைந்தால் உன் இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு என்று ஏசுபெருமானையும் செப்ப வைத்தது. நபிகள் நாயகமும் போற்றியதும் அஃதே ஆகும்.

" இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்றார் வள்ளுவப் பெருந்தகை. என்னே அவர்தம் மனப்பக்குவம். போர்க்களத்தில் மன்னர்களும் மனிதநேயத்தோடு,

" ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழுநர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாதீரும்
எம்மம்பு கடிது விடுதும் நும் அரண் சேர்மின்". (புறம்)

என்று போர் அறம் போற்றி பண்பாடு, மனிதநேயத்தை முன்னோர் போற்றியதன் வெளிப்பாடாகும். பகைவர்க்கருளும் நன்னெஞ்சு பாரதப் பண்பாட்டின் அடையாளம் ஆகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனின் வரிகள் உலகை ஆள்வதும் மனிதநேயத்திற்காக அல்லவோ.

நேயமற்ற மன்னனைச் சாதாரணப் புலவனும் செவியறிவுறுத்தும் காட்சியைச் சங்க காலத்தேதான் காணுதல் கூடும்.

" காய் நெல்லறுத்துக் கவளங்கொளினே
மாநிரை வில்லதும் பன்னாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தனித்துப் புக்கு உணினே
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடியாத்து நாடுபெரிது நந்தும்

மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவு பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே” (புறம்:184)

என்று மகிழ்ச்சியில் மைந்துறும் மன்னனுக்கு உணர்த்தி மனிதநேயத்தை வாழ்வித்தது புலவர் கூட்டம். வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர் புலவர்கள். பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதலாம்.

“நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கும் என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே’ (புறம்:163)

எனும் பெருஞ்சித்திரனாரின் கூற்று அதனை உறுதி செய்யும்.

கொட்டிக் கொண்டேயிருப்பது தேளாகிய ஜந்துவின் இயல்பென்றால் மனிதநேயத்தோடு ஒருயிர் காக்க, அதுவும் புறாவெனும் பறவையின் உயிர்காக்கத் தன் சதையை அரிந்து துலாக் கோலிலிட்ட சிபிச் சக்கரவர்த்தியும்,

ஆவின் கன்றினைத் தேர்க்காலிட்டு அறியாமல் கொன்றான் மகன் வீதிவிடங்கன் என்பதைப் பசு அடித்த ஆராய்ச்சி மணி உணர்த்தத் தன் மகனையும் தேர்க்காலிலிட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும் வாழ்ந்ததனால் அன்றோ,

“உண்டாலம்ம இவ்வுலகம்
தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் உண்மையானே”
(புறம்:182)

எனப் பாடினான் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி.

நன்நாகரிகமிக்க பண்டைக்கால மக்கள் இயற்கையோடியைந்து வாழ்ந்தனர். நாடாவளத்த நாடுகள் இருந்தன. சாதி, மத வேறுபாடின்றிப் புலவர்களுக்குப் புரவலர்கள் பெருமதிப்பளித்தனர். மக்களும் 'ஏவா மக்கள் மூவா மருந்தென' அடங்கிப் பணிந்து மனிதம் போற்றி வாழ்ந்தனர்.

போர்க்களத்திலிருந்து மீளும் தலைவன் தலைவியைக் காணும் பேராவலில் தேரில் விரைந்து வந்தான். வருகிற வழியோ காடு, பூக்காடு தேனுண்ணும் வண்டுகள் களித்து மகிழ்ந்திருந்தன. அதனூடு வழியில் வருவோன் அக்காட்சியைக் காண்கிறான். தன் தேரில் கட்டப்பட்ட மணியின் ஓசை அந்த வண்டுகளின் இன்ப வாழ்விற்கு இடையூறாகிவிடக் கூடாதே என்று தன் தேரில் கட்டப்பட்ட மணியின் நாவினை இழுத்துக் கட்டிவிட்டு வந்தான் மனிதநேயம் மிக்க மன்னன். தன் நலம் நாடிப் பிறர் நலம் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டிருந்த மானுட சமுதாயம் பற்றி நற்றிணை,

'ஆழி மருங்கின் அலவன் ஓம்பி, வலவன்வள் பாய்ந்தூர"

என ஊர்தியில் வருவோர் உயிர்கட்கு ஊறு உறாத வகையில் ஊர்தியைச் செலுத்துவர் என்கிறது.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" புறம் 165 (1–2)

என்றதே பண்டைக்காலம். இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஓய்மா நாட்டு நல்லியக் கோடனைப் பாடிய சிறுபாணாற்றுப்படையில்,

"வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்"

என மயிலுக்குப் போர்வை ஈந்த பேகனும்,

"சுரும்புண
நறுவீ உறைக்கும் நாகநெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் அருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்"

என முல்லைக்கொடி தள்ளாடுதல் கண்டு தன் தேரினை ஈந்த பாரியும்,

"கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நன்மொழி யிரவலர்க் கீந்த
அழல் திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல்தொடித் தடக்கை காரியும்"

வாலுளைப் புரவியொடு இரவலர்க்கு நல்மொழி ஈந்த காரியும்,

"நிழல்திகழ் நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும்"

நீலமணியினையும் நாகம் தந்த கலிங்கத்தையும் ஆலமர் செல்வனுக்கு ஈந்த ஆய் அண்டிரனும்,

"கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி மால்வரைக்
அமிழ்து விளை தீங்கனி ஒளவைக் கீந்த
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்"

தனக்கு அரிதாகக் கிடைத்த உயிர்க்கனியாம் நெல்லிக்கனியை ஒளவைக்கீந்த அதிகமானும்,

"கரவாது
நட்டோருவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கை
துளி மழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும்"

நட்டோர் உவப்பு, ஒன்றன்கூறாடை உடுப்பவரே ஆயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை என நல்லறம் நடத்த முட்டாது செல்வத்தை வாரி வழங்கிய நள்ளியும்,

"நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்து
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரை காரியொடு மலைந்த
ஓரிக்குதிரை ஓரியும்"

சுரபுன்னை நிறைந்த சிறுசிறு மலைகளோடு நாடுகளையும் காரிக்குதிரையோடு கொடுத்த ஓரியும் எனும் எழுபெரு வள்ளல்களும் ஒன்று சேர்ந்தாற்போன்ற பண்பினனாக நல்லியக் கோடனைப் போற்றிப் புகழ்கின்றார். இவ்வொரு பாடலையேனும் ஆழ்ந்து நோக்கின் பண்டை இலக்கியங்கள் காட்டும் மனித நேயத்தை உணரலாம்.

பறவை இனமான மயிலின் துயரும்; ஓறறிவுயிர் எனும் புல், பூண்டு வகையான முல்லையின் துயரும் இரவலர்க்கு நல்மொழியும் தமிழ் வாழவும், நட்டோரும் இல்லறத்தாரும் இன்புறவும் கல்லாய் நின்ற கடவுள் துயர் தீர்க்கவும் முனைந்த எழுபெரும் வள்ளல்களின் செயல்கள் மனிதநேய மாண்பினை விளக்குவனவாகும். அதனாலன்றோ அன்று முருகப் பெருமானைப் பரவிய பக்தர்கள் பரிபாடலில்,

> *"யாமிரப்பவை*
> *பொன்னும் பொருளும் போகமும் அல்ல நின்பால்*
> *அருளும் அன்பும் அறனும் மூன்றும்*
> *உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே"* (பரி:578–81)

என்று வேண்டினர். அப்பண்பே காலம் காலமாகப் போற்றப்பட்டு வள்ளலார் போன்றோரை,

> *"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்"*

என்று ஜீவகாருண்யம் வளர்க்க வைத்தது. பின் வந்த சமயங்கள் வளர்க்க விரும்பியதாவது, சிற்றுயிர்களின் துன்பம் தீர்ப்பதும், பசிக்கு உணவளிப்பதும், இனிய சொல் பேசுவதுமான மனிதநேயப் பண்பாடாகும். அதற்கு வேண்டுவது நம் பண்டையோர் வேண்டுவது போல அருள், அன்பு, அறன் எனும் மூன்றுமேயாகும்.

இன்று உலக அளவில் மனிதநேயம் காக்க 1960ல் இத்தாலியைச் சேர்ந்த சிலோ என்பவர் இயக்கத்தைத் துவக்கினார். இப்பொழுது 110 நாடுகளில் இந்த இயக்கம் செயல்படுகிறது. தலா 11பேர் கொண்ட 200 குழுக்கள் நாடு நாடாகச் சென்று மனிதநேயம் குறித்துப் பிரசாரம் செய்து வருவதை நோக்க நம் முன்னோரின் மாண்பும், மனிதநேயமும், ஈடு இணையற்ற பெருமைக்குரியதாகத் திகழ்கிறது.

எண்கள்

புலவர் க.தண்டபாணி
வீரசோழபுரம்.

இலக்கண இலக்கியங்களைப் படைத்த அக்காலப் புலவர்கள் தாம் சொல்ல வேண்டிய எண்ணை நேரடியாகச் சொல்லாமல் எண்களைக் கூட்டியும், கழித்தும், பெருக்கியும் சொல்ல வேண்டிய எண் தோன்றுமாறு வேறு சொற்களால் சில இடங்களில் கூறியுள்ளனர். மூன்றையும், ஆறையும் பெருக்கினால் பதினெட்டு கிடைக்கிறது. ஆதலால் பதினெட்டு என்பதை மூவாறு என்று பெருக்கிக் (3x6=18) கூறியுள்ளனர். இது போன்று சில எண்களை வேறு சொற்களால் இலக்கண இலக்கியங்கள் கூறும் இடங்களை இவண் காண்போம்.

1. நன்னூல் 61 ஆம் நூற்பா, இருநூற்றுப் பதினாறு என்ற எண்ணை இரட்டு நூற்றெட்டு என்று கூட்டிக் (108+108=216) கூறுகிறது.
2. அதே நூற்பா, முப்பத்தாறு என்ற எண்ணை ஆறாறு என்று பெருக்கிக் (6x6=36) கூறுகிறது.
3. அதே நூற்பா, முன்னூற்றறுபத்தொன்பது என்ற எண்ணை ஒன்றொழி முன்னூற்றெழுபான் என்று கழித்துக் (370–1=369) கூறுகிறது.
4. நன்னூல் 129 ஆம் நூற்பா, நாற்பத்திரண்டு என்ற எண்ணை ஆறேழ் என்று பெருக்கிக் (6x7=42) கூறுகிறது.
5. தொல்காப்பியம் – எழுத்து – 104 ஆம் நூற்பா, இருபத்து நான்கு என்ற எண்ணை அறுநான்கு என்று பெருக்கிக் (6x4=24) கூறுகிறது.
6. தொல்காப்பியம் – சொல் – 383 ஆம் நூற்பா, பத்து என்ற எண்ணை ஈரைந்து என்று பெருக்கிக் (2x5=10) கூறுகிறது.
7. சிலப்பதிகாரம் – பதிகம் – 51 ஆம் அடி, பதினான்கு என்ற எண்ணை ஈரேழ் என்று பெருக்கிக் (2x7=14) கூறுகிறது.
8. சிலப்பதிகாரம் – அரங்கேற்று காதை 164 ஆம் அடி, ஆயிரத்து எட்டு என்ற எண்ணை நூறுபத்தடுக்கி எட்டு என்று பெருக்கியும், கூட்டியும் (100x10+8=1008) கூறுகிறது.

9. சிலப்பதிகாரம் – இந்திர விழா ஊர் எடுத்த காதை – 176 ஆம் அடி, பதினென் கணங்கள் என்ற தொடரை மூவறு கணங்கள் என்று பெருக்கிக் (3x6=18) கூறுகிறது.

10. சிலப்பதிகாரம் – வேனிற் காதை – 64 ஆம் அடி, அறுபத்து நான்கு கலைகள் என்ற தொடரை எண்ணெண் கலைகள் என்று பெருக்கிக் (8x8=64) கூறுகிறது.

11. சிலப்பதிகாரம் – நாடு காண் காதை – 42 ஆம் அடி, முப்பது காதம் என்ற தொடரை ஆறைங் காதம் என்று பெருக்கிக் (6x5=30) கூறுகிறது.

12. சிலப்பதிகாரம் – கால் கோட் காதை – 25 ஆம் அடி, பன்னிரண்டு என்ற எண்ணை ஆறிரு என்று பெருக்கிக் (6x2=12) கூறுகிறது.

13. சிலப்பதிகாரம் – கால் கோட் காதை – 128 ஆம் அடியும், 146 ஆம் அடியும் நூற்று இருவர் என்ற தொடரை ஈரைம்பத்திருவர் என்று பெருக்கியும், கூட்டியும் (2x50+2=102) கூறுகிறது.

14. சிலப்பதிகாரம் – கால் கோட் காதை – 132 ஆம் அடி, நூறு என்ற எண்ணை ஐம்பதிற்று இரட்டி என்று பெருக்கிக் (50x2=100) கூறுகிறது.

15. சிலப்பதிகாரம் – கால் கோட் காதை – 134 ஆம் அடி, பத்தாயிரம் என்ற எண்ணை ஐயீராயிரம் என்று பெருக்கிக் (5x2x1000=10000) கூறுகிறது.

16. சிலப்பதிகாரம் – கால் கோட் காதை – 138 ஆம் அடி, ஆயிரவர் என்பதை ஈரைஞ்ஞூற்றுவர் என்று பெருக்கிக் (2x5x100=1000) கூறுகிறது.

17. சிலப்பதிகாரம் – கால் கோட் காதை 10 ஆம் அடி, பன்னிரண்டு ஆண்டு என்ற தொடரை ஓரீராறாண்டு என்று பெருக்கிக் (1x2x6=12) கூறுகிறது.

18. சிலப்பதிகாரம் – நாடுகாண் காதை – 130 ஆம் அடி, ஐம்பது என்ற எண்ணை ஐயைந்திரட்டி என்று பெருக்கிக் (5x5x2=50) கூறுகிறது.

19. திருப்புகழ் – 80 ஆம் பாடல் ஆயிரம் என்ற எண்ணைப் பதினூறு நூறு (10x100=1000) என்றும் இருபதாயிரம் என்ற எண்ணை பதினிருபது நூறு (10x20x100=20000) என்றும் பெருக்கிக் கூறுகிறது.

20. தண்டி அலங்காரம் – 28 ஆம் நூற்பா, முப்பத்தைந்து என்ற எண்ணை ஏழைந்து என்று பெருக்கிக் (7x5=35) கூறுகிறது.

21. சுந்தரகவிராயர் அவர்கள், பதின்மூன்று என்ற எண்ணை ஈராறும் ஈரரையும் என்று பெருக்கியும், கூட்டியும் (2x6+2x½=13) கூறியுள்ளார்.

22. காளமேகப் புலவர் அவர்கள், பன்னிரண்டு என்ற எண்ணை முந்நான்கு என்று பெருக்கிக் (3x4=12) கூறுகிறது.

23. மணிமேகலை – பதிகம் – 98 ஆம் அடி, முப்பது பாட்டு என்ற தொடரை ஆறைம்பாட்டு என்று பெருக்கிக் (6x5=30) கூறுகிறது.

24. தண்டி அலங்காரம் – 37 ஆம் நூற்பா, பதினைந்து என்ற எண்ணை ஐம்மூன்று என்று பெருக்கிக் (5x3=15) கூறுகிறது.

25. அகப்பொருள் விளக்கம் – 143 ஆம் நூற்பா, பன்னிரண்டு என்ற எண்ணை ஈராறு என்று பெருக்கிக் (2x6=12) கூறுகிறது.

26. அகப் பொருள் விளக்கம் – 137 ஆம் நூற்பா, இருபத்து நான்கு என்ற எண்ணை நாலாறு என்று பெருக்கிக் (4x6=24) கூறுகிறது.

27. திருவருட்பா – அகவல் – 220 ஆம் அடி, எட்டடி என்பதை தொண்ணூற்றாறு அங்குலம் என்று பெருக்கிக் (8=96/12) கூறுகிறது.

28. திருவாசகம் – திருவெண்பா 9ஆம் பாடல், நாற்பத்து எட்டு என்ற எண்ணை மூவறு முப்பது என்று பெருக்கியும், கூட்டியும் (3x6+30=48) கூறுகிறது.

29. திருவாசகம் – போற்றித் திருவகவல், நான்கு திங்கள் என்ற தொடரை ஈரிரு திங்கள் என்று பெருக்கிக் (2x2=4) கூறுகிறது.

30. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் – 8. திருவாரூர் – மூன்றாம் பாடல், தொண்ணூற்றாறு என்ற எண்ணை அறுபதும், பத்தும், எட்டும், (சேரும்) ஆறினோடு அஞ்சு நான்கும் என்று கூட்டியும், பெருக்கியும் (60+10+6+5x4=96) கூறுகிறது.

தமிழ் மொழியில் உள்ள இலக்கண இலக்கியங்களில் இது போன்ற எண்கள் மேலும் பல இடங்களில் உள்ளன. அவற்றை வந்துழி வந்துழி அறிக. இதுபோன்ற எண்களை நாமும் கவிதைகளில் பயன்படுத்தலாமே.

சங்க இலக்கியங்களில் சொற்கள் காட்டும் தொன்மை

பேராசிரியர் அருள்நிதி இராம இருகப்பிள்ளை

"வானம் அளந்தது அனைத்தும் அளந்த வண்மொழி" என்று உலகக் கவிஞன் பாரதியார் அவர்களால் போற்றப்பட்ட தமிழ் மொழி. 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த மொழி' என அதன் பழமை பற்றிய பழமொழி பெற்றிருந்தாலும், பன்னெடுங்காலமாகப் புவியில் வழங்கி வருவதாகவும், உயர்ந்த சிந்தனைகளை உள்ளடக்கிய சிறந்த இலக்கியங்களைப் பெற்றுள்ளதாகவும் தன்னையொத்த மொழிகள் வாழ்தற்கும், வளர்தற்கும் உதவும் உத்தமத் தன்மை மிக்கதாகவும், எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் சமாளித்துத் தன்னைத் தக்க வைத்துக் கொள்ளும் தகுதியுடையதாகவும் விளங்கும் ஒரு மொழியைத்தான் செம்மொழி என்று அழைப்பர். 'செம்மை நலம்' என்பதற்கு நேர்மையினால் ஆன நன்மை என்றும் 'செம்மை மனம்' என்பதற்கு மாசு மறுவற்ற மனம் என்றும் பொருள் காண்பர் பெரியோர். இந்த எல்லாச் சிறப்புகளும் தமிழ்மொழிக்கு உண்டு.

கடந்த 2500 ஆண்டுகளாக வந்த மொழியை வாழ வைத்தாலும் வாழ்வு பெற்ற மொழிகள் வஞ்சகம் செய்வதே அதன் வாழ்வாகக் கொண்டிருப்பதனை இந்திய நாட்டில் வழங்கும் பல மொழிகளின் வரலாறுகளைக் காய்தல் உவத்தல் இன்றி நடுநிலை நின்று ஆய்வு செய்வார் அறிவர்.

கடந்த 4000 ஆண்டுகளாகத் தமிழ் மொழியைத் தாய் மொழியாகப் பெற்றவர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவே வாழ்ந்து தம் தாயைப் பற்றிய சிந்தனையே இன்றி வாழ்ந்துவருகிறார்கள் என்பதும் அவ்வப்போது தாங்கள் தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள் எனச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள தாயைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்பதும், அவள்தம் ஏற்றத்தையும் எழிலையும் பயன்பாட்டின் பெருமையையும் பிறர் விளங்க உதவும் பணிகளில் தமிழ்நாட்டினர் ஈடுபடுவதில்லை என்பதும் 4000 ஆண்டு தமிழக வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பவர் அறிவர்.

பெற்ற மக்கள் இப்படியென்றால் உற்றமக்கள் உரிய மக்களைவிடப் பெரிதும் உதவுவார் போன்று பரிமளிக்கச் செயல் செய்து கடைசியில் செவிலித் தாயாய் நின்ற அவளை வாழ்விழக்கச் செய்யும் வழிகளில் பிறர் அய்யப்படா வகையில் செயல்களைச் செய்யும் திறம் பெற்றவர்களாக இருப்பதனை நடைமுறை நிகழ்ச்சிகளைக் கூர்ந்தும் உணர்ந்தும் நோக்கின் அறியலாம். தன் விரல்களைக் கொண்டே தன் கண்களைக் குத்தச் செய்யும் வல்லவர்களாக விளங்குவதனைத் தெளியலாம்.

கடந்த கால வரலாறுகளை எல்லாம் விளக்கிக் கொள்ள உள்ளதைக் கொண்டு சென்றதை உணர்தல், தெரிந்ததைக் கொண்டு தெரியாததைப் புரிந்து கொள்ளல் என்ற வகையில், இன்றைய தமிழகத்தில் தமிழ்த்தாயின் நிலை பற்றி எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் தாய்த் தமிழ்ப் பள்ளிகளே தொடங்கப் பெற்று சாதாரண மக்களும் தரம் மிக்கவர்களாக உயர வழி வகை காணப்பட்டது. ஆங்கிலம் அறிந்தவர்களும் கூட தமிழில் அழைப்பு அனுப்புவதில் பெருமிதம் கொண்டனர். ஆனால் இன்றைக்குத் தமிழ் நாட்டில் தாய்த் தமிழ்ப் பள்ளி என்பது தியாக உணர்வை வெளிப்படுத்தும் செயலாகக் கருதப்படும் அவல நிலை உருவாகியுள்ளது. ஆங்கில மொழியின் எழுத்தறிவு இல்லாதவரும் அழைப்பிதழ்களை ஆங்கிலத்தில் அச்சடித்து அனுப்புவதில் பெருமிதம் கொள்கின்றனர். இப்படிப்பட்ட இன்றைய பல நிகழ்வுகளை வைத்து யார் எப்படி எப்பொழுது யாரால் செய்ய வைக்கின்றனர் என்பதனைக் கடந்த 50 ஆண்டுத் தமிழக வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டு தெளிந்தால் 4000 ஆண்டுக் கால வரலாற்றை அனுமானிக்கலாம். இப்படிப்பட்ட மறைமுகமான மற்றும் நேரிடையான நிகழ்ச்சிகட்கு இடையேயும் தமிழன்னை தன்னை 'தக்கவைத்துக்' கொண்டு வாழ்கின்றாள். அதுதான் அந்த மொழி பெற்றுள்ள தகுதி, வாழ்க்கை – 4000 ஆண்டுகளாகத் தொடர்ந்து சூழ்ச்சிக்கிடையேயும் தன்னைத் தக்க வைத்துக் கொண்டு செம்மாந்து நிற்கும் மொழி தமிழ் மொழி.

கருத்துச் செறிவும், இனிமை இயல்பும், வாழ்விற்கு வழி காட்டும் வன்மையும் மிக்க இலக்கியங்களைக் கொண்டுள்ள மொழி தமிழ் மொழி. அம்மொழியில் வழங்கும் சொற்களையும், தொடர்களையும்

பொருளுணர்ந்து கற்றுத் தெளிந்தால் அம்மொழியின் பெருமையும் அம்மொழியை உருவாக்கிய மக்களின் பெருமையும் தெளிவாக விளங்கும்.

தமிழின் தொன்மை பற்றிப் பலரும் ஆய்ந்து தமிழ்மொழியின் காலம் கி.மு.3000க்கும் முற்பட்டது என்று உரைக்கின்றனர். ஆய்வுக்கண் கொண்டு, பல நூல்கள், பல மொழிகள், பல இன மக்களின் பண்பாடுகள் போன்றவற்றை நுணுகி ஆராய்ந்தால் தமிழின் தொன்மை நன்கு விளங்கும். திருமந்திர மணி, அறிஞர் துடிசை கிழார் அ.சிதம்பரனார் எழுதிய கால வரையறையுடன் தமிழ்ச் சங்கங்களின் வரலாறு, அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கனார் எழுதியுள்ள பழந்தமிழகம், ஆர்.டி.பானர்ஜி எழுதியுள்ள திராவிடர்களின் நாகரிகம், டி.ஆர்.பந்தர்கர் எழுதியுள்ள வரலாற்றுக்கும் முற்பட்ட நிலையில் சிவ வழிபாடு, ஈராசுப் பாதிரியார் அவர்கள் மொகஞ்சதாரோ பற்றி எழுதியுள்ள நூல்கள், பேராசிரியர் சு.சு.பிள்ளை அவர்கள் எழுதியுள்ள இலக்கிய வரலாறு, இந்திய வரலாறும், பண்பாடும் – (வேதகாலம் முதல் தொகுதி பாரதீய வித்யா பவன் மும்பை என்பன போன்ற நூல்களைப் படித்தால் தமிழ்மொழியின் பழமை பற்றிய பல செய்திகளை அறியலாம். திராவிடர்களோடு ஆஸ்திரேலியர்கள், ஆப்பிரிக்கர்கள், சீனர்கள் போன்றோரை இணைத்துப் பேசுவதின் உண்மை குமரிக் கண்டம் என்ற ஒன்று இருந்து அது கொஞ்சம் கொஞ்சமாகக் கடலால் கொள்ளப்பட்டு இன்றைய குமரி முனை வரை வந்துள்ளது என்ற உண்மையைத் தெளிவதன் மூலம் வெளிப்படும். அப்பொழுது தமிழரின் பழமையும் தமிழின் பழமையும் நன்கு அறியப்படும். கடல் கோள்களுக்கு உட்பட்டவர்கள் இமயமலை நோக்கிச் சென்று குடியமர்த்தி வாழ்ந்து தங்கள் நாகரிகப் பண்பாட்டை நிலை நிறுத்தியுள்ளனர் என்பதும், பின்பு வந்தவர்கள் அவர்களை வஞ்சமாக விரட்டியும் தங்களவர்களாக மாற்றியும் இழிந்தவர்களாக ஒதுக்கியும் முதன்மை பெற்றனர் என்பதும் தெளிவாகும்.

மிகப் பழங்காலத்து நிகழ்ந்த அச்செய்திகளைத் தற்போது கிடைத்துள்ள சங்க இலக்கியங்களில் குறிப்பாகப் பதிய வைத்துள்ளனர்.

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்தும்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி".

(சிலம்பு–காடு 18–22)

"புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல் போலாது ஈங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்".

(சிலம்பு–புறஞ்சேரி 132–133)

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன்".

(மதுரைக் காஞ்சி 761–763)

"செந்நீர் பசும்பொன் வயிரவர்க்கு ஈந்த
முந்நீர் விழாவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறம்)

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை"

(சிறுபாண் 66–67)

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை".

(புறம் 72)

"மதிமொழி இடல்மாலை வினைவர் போல் வல்லவர்
செதிமொழி சீத்த செவி செறுவாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ் புனல் ஊர்". (கலி 68)

"தமிழ் கெழு கூடல் தண் கோல் வேந்தே" (புறம் 55)

இக்கட்டுரையில் சங்ககால இலக்கியங்களில் பயிலப்பட்ட தமிழ்ச் சொற்களில் சிலவற்றை எடுத்துப் பொருள் விளக்கம் கண்டு தமிழின் பழமை பற்றி எண்ணச் செய்வதோடு எவ்வளவு பண்பட்ட உள்ளம் இருந்திருந்தால் இத்தகைய அனுபவச் சொற்கள் உருவாகி இருக்கும் என எண்ணிப் பார்க்க ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற உத்தியின் அடிப்படையில் எழுதத் துணிந்தேன்.

"நாட்பட நாட்பட நாற்றமும் சேறும்
பாசியும் புதைந்து பயனீரிலதாய்
நோய்க்கள மாகி அழிகெனும் நோக்கமோ
விதியே விதியே தமிழச் சாதியை
என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ
சார்வினுக் கெல்லாம் தகத்தக மாறித்
தன்மையும் தனது தன்மமும் மாயாது
என்றுமோர் நிலையாய் இருந்துநின்னருளால்
வாழ்ந்ததும் பொருளொடு வகுத்திடு வாயோ"

என்ற பாரதியின் ஆதங்கத்தோடு ஒன்றுபட்டுச் சிலவற்றை உங்கள் முன் வழங்குகின்றேன். தொன்மையை உணர்த்தவும் தமிழ் மொழியின் செம்மையை நினைக்கவும் சில சொற்பொருள்களைப் பயன்படுத்தி உள்ளேன். அவற்றின் பொருத்தம்,* பொருத்தமின்மை ஆகியன பற்றி நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

(அடுத்த இதழில் தொடரும்)

ஒரு குறள் படும்பாடு

பெரும்புலவர். ப.அரங்கசாமி
லால்குடி

திருக்குறட் பாக்களுக்குப் பரிமேலழகர் முதல் இன்றுவரை ஏறத்தாழ 138க்கு மேற்பட்ட அறிஞர்கள் உரை எழுதியுள்ளனர். மேலும் சில உரைகள் இருக்கலாம். இவை கருத்துரை, பொழிப்புரை, விளக்கவுரை, விரிவுரை, தெளிவுரை, சொற்பொருள் என இவ்வகையில் அமைந்தன. இவற்றுள் ஒரு குறட்பாவிற்குப் பலர் பலவாறு உரை எழுதியுள்ளனர். அவற்றுள் ஒரு குறளுக்குப் பலர் எழுதிய உரையும், அவற்றின் பொருத்தமும் அக்குறட்பாவில் அறிய வேண்டிய செய்தியும் பற்றியது இக்கட்டுரை.

> ***நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்***
> ***வித்தகர்க் கல்லால் அரிது.***

இக்குறட்பாவில் பொதிந்துள்ள மையக்கருத்தும் இதிலடங்கிய உவமை விளக்கமும் தெளிவுபடுத்தப்படாத முறையில் பெரும்பான்மை உரைகள் அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாகச் சில அறிஞர்களின் உரைகள் தரப்பட்டுள்ளன.

பரிமேலழகர்

புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்பு உளதாகிய சாக்காடும் சதுரப்பாடு உடையார்க்கு அல்லது இல்லை.

நந்து என்னும் தொழிற்பெயர் விகாரத்தால் நத்து என்றாய் பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று.

மணக்குடவர்

> ***"ஆக்கம்போலக் கேடும் உளதாமாற் போலச் சாதலும்***
> ***வல்லார்க்கு அல்லது அரிது."***

பரிதியார்

"சங்கு ஆயிரம் சூழ்ந்த வலம்புரி போலே கிளையானது" தன்னைச் சூழ வாழ்வது கீர்த்திமானுக்குக் கைவரும் என்றவாறு".

காளிங்கர்

"வலம்புரிச் சங்கானது தன்னிலை குலைந்து பிறர் கைப்படினும் தன்பெருமை குன்றாது போல இல்லறம் இயற்றும் நல்லறிவாளர் தாம் வாழுமிடத்தும் கெடுமிடத்தும் தம்புகழ் விளங்கக் கெடுவதோர் கேடும், அதுவேயன்றி மற்றிறந்து படினும் விரிபுகழ் விளைக்கும் அல்லது மற்றுளோர்க்கு என்னும் அரிது என்றவாறு".

நாமக்கல் கவிஞர்

"ஒரு பொழுதும் நிலையில்லாத இந்த உலகத்தில் உயர்ந்த கீர்த்தியைத் தவிர அழியாமல் நிலைத்திருக்கக் கூடியது வேறொன்றும் இல்லை".

பாவாணர்

புகழுடம்பின் கரு வளர்ச்சியடையது போல் (முழுவளர்ச்சியுற்ற) பூதவுடம்பு தளர்ச்சியடைவதும் அப்புகழுடம்பின் பிறப்பாகிய பூதவுடம்பின் இறப்பும் திறப்பாடுடையவர்க்கின்றி ஆகாவாம்.

டாக்டர் மு.வரதராசனார்

"புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ்நிலை நிற்பதற்காகும் சாவும் அறிவிற் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை".

முனைவர் வ.சு.ப.மாணிக்கனார்

"புகழின் பொருட்டு அழிதலும் சாதலும் அறிவுடையார்க்கே இயலும்".

சாமி சிதம்பரனார்

"அறிவுள்ளோரைத் த்விர மற்றவர்க்குப் புகழ் உடம்பு வளர்வது போன்ற வறுமையும் அப்புகழுடம்பு நிலைபெறுவதான மரணமும் அறிவற்றவர்க்கு இல்லை".

திருக்குறள்வேள் ஜி.வரதராசன்

"அழிவதுபோல் காணப்படும் வளர்ச்சியும் சாவது போல் காணப்பட்டு என்றும் நிலைத்திருத்தலுமாகிய ஓர் அதிசயம் செயல் அறிவாற்றல் நிறைந்தவர்களுக்கே முடியுமன்றிப் பிறருக்கு இல்லை".

பேராசிரியர் மயிலை சிவமுத்து

"அறிவுடையோர் துன்பம் வந்த காலத்திலும் செல்வம் பெற்றவர் போல் வளர்ச்சி பெற்றே விளங்குவர். அவர் இறந்தபோதும் புகழுடம்புதாங்கி என்றும் இறவாமல் இருப்பர். இத்தகைய தன்மையை மற்றவர்கள் அடைய முடியாது".

புலவர் இரா.இளங்குமரனார்

"சங்கைச் சுடச்சுட வெண்மை பளிச்சிடல் போல் புகழ் வளரவரும் வறுமையும், புகழ் நிலைபெற உண்டாகும் இறப்பும் வாழ்வியல் திறம் மிக்கோர்க்கே அல்லாமல் பிறர்க்கு வாய்த்தல் இல்லை".

திருக்குறள் அறிஞர் ஆ.வே.இராமசாமி

"சங்குப்பூச்சி இறந்த பிறகும் சங்குக் கூடு இருந்து பயன்படும். அதைப்போல உடல் அழிந்த பிறகும் புகழ் நிலைத்திருக்கும் செயலைச் செய்தல் சான்றோர்க்கே இயலும்".

முனைவர் சாலமன் பாப்பையா

"பூத உடம்பின் வறுமையைப் புகழுடம்பின் செல்வமாக்குவதும் பூத உடம்பின் அழிவைப் புகழுடம்பின் அழியாத்தன்மை ஆக்குவதும், பிறர்க்கு ஈந்து தாம் மெய்யுணர்ந்து அவா அறுத்த வித்தகர்க்கு ஆகுமேயன்றி மற்றவர்க்கு ஆவது கடினம்".

பேராசிரியர்அ.மாணிக்கம்

"பொருளைக் கொடுத்துப் புகழைச் சம்பாதித்தலும், புகழ் உடம்பை நிறுத்தி பூத உடம்பை விடுதலும் அறிவாற்றல் உள்ளவர்க்கே முடியும்".

மேற்காணும் உரைகளில் ஒரிருவர் சங்குப்பூச்சி, சங்கு இவற்றைத் தொட்டுக் காட்டிப் புகழ் பெறுதலைக் கூறியுள்ளனர்.

ஆனால், சங்குப்பூச்சிக் கேடு அடைதலும் சாதலும் ஆகிய வினை உவமைகளைப் பொருளுடன் (உவமேயத்துடன்) பொருத்திக் காட்டிப் புகழ் பெறுங்கால் அடையும் கேடும் புகழ் நிலைநிறுத்தலுக்காக அடையும் சாதலும் விளக்கப்படவில்லை. இதுதானே இக்குறளின் மையப்பொருள்.

சிலர் 'வறுமை' எனக் கூறினர். வறுமைக்கு இக்குறளில் இடம் எது ?

நிற்க. இக்குறட்பாவிற்கு உரை காணும் முன், இக்குறட்பா இடம்பெற்ற அதிகாரம், நத்தம் என்ற சொல்லின் பொருள், இதிலமைந்துள்ள உவமை–பொருள் (உவமேயம்), இதன் மையக்கருத்து–போந்த பொருள் இவற்றை மனங்கொள்ளல் வேண்டும்.

அதிகாரம் : இக்குறட்பா இடம்பெற்றுள்ள அதிகாரம் 'புகழ்'.

நத்தம் : கடலில் வாழும் சங்குப்பூச்சி 'நத்தை' எனப்படும்.

இச்சொல்லின் (நத்தை) ஈறுதிரிந்து அம் சாரியைப் பெற்று நத்தம் என்றாயிற்று.

இங்ஙனம் சில சொற்கள் ஈறுதிரிந்து அம் சாரியை பெற்று வருதல் இயல்பு.

சான்று : முத்து என்பது முத்தம் எனத்திரிந்து நிற்றல்.

"கடல் பயந்த கதிர்முத்தம்" (புறம் 377)

'ஆரம் பிரிந்த முத்தம் கோப்போர்' – மணிமேகலை காதை 19 வரி 85

'சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக' – திருவாசகம்

'முத்தம் சொரியும் கடலலைவாய் – திருச்செந்தூர் – முருகன் பிள்ளைத்தமிழ்

இவ்வாறே நத்தை என்பது நத்தம் என நின்றது.

நத்தை : இது சதையாலான உடலும் மேலே கெட்டியான ஓடும் கொண்ட உருவமுடையது. இந்த ஓடுதான் சங்கு.

உவமை-பொருள் பொருத்துதல்:

உவமை – 1 : சங்குப்பூச்சியின் ஓடாகிய சங்கின் வடிவம் வளரும் தன்மையது. இச்சங்கு வடிவம் பெரிதாக வளரவளர அதன் அழுத்தம் உள்ளே இருக்கும் பூச்சிக்குத் துன்பம் (கேடு) அளிக்கிறது. இத்துன்பத்தைச் சங்குப்பூச்சி (நத்தை) பொறுத்துக் கொண்டு சங்கு வடிவத்தை வளர்க்கிறது.

பொருள் (உவமேயம்) – 1 : அதுபோல, அறிவாற்றல், ஒழுக்கம், பண்பு முதலியன உடைய வித்தகர் தாம் புகழ் பெற்று வருங்கால் அதனால் உண்டாகும் கேடுகளைப் பொறுத்துக் கொண்டு நாளும் புகழ் வளர்ப்பர் என்பதாம்.

உவமை – 2 : கேடுகளைப் பொறுத்துக் கொண்டு சங்கின் வடிவத்தை வளர்த்து வரும் சங்குப்பூச்சி, அச்சங்கு முழுமையான வடிவம் உருவாக்கித் தருங்கால் தன் உயிரை விட்டுவிடும் சாக்காட்டை ஏற்கும்.

"நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக்
கொண்ட கருவழிக்கும் கொள்கைபோல்"

– நன்னெறி

பொருள் (உவமேயம்) : அதுபோல், புகழ் பெருகி வருங்கால் உண்டாகும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, அப்புகழ் நிலைநிறுத்துவதற்குத் தன் உயிரை விட வேண்டுமெனில் அதற்காகத் தன் உயிரை விடும் சாக்காட்டை ஏற்கும் ஆற்றலுடையவர் வித்தகர் என்பதாம்.

நந்து என்பதே நத்தம் ஆயிற்று என்றார் ஒருவர். நத்தம் என்பதற்கு 'ஆக்கம்' என ஒருவரும், 'வளர்ச்சி' என ஒருவரும், 'வலம்புரிச் சங்கு' என ஒருவரும் பொருள் கூறினர்.

'நத்தம் போல்' என்பதற்கு 'சங்கைச் சுடச்சுட வெண்மை பளிச்சிடுவது போல்' என ஒருவரும், வறுமை என ஒருவரும் பொருள் கொண்டனர்.

இங்ஙனம் இக்குறட்பாவிற்கு ஆளுக்கொரு கருத்துக் கூறியதோடு, உவமை – பொருள் விளக்கம் தரவில்லை. இதனால் இக்குறட்பா உணர்த்தும் சிறந்த பொருள் நுட்பம் படிப்போர் அறிய முடியாத நிலை.

எனவே, மேலே 'போந்த பொருள்' என்றதலைப்பில் கூறியவாறு இக்குறட்பாவின் ஆழ்ந்த பொருள் நுட்பம் அறிவோமாக.

தொடர்பு முகவரி :

ஆசிரியர், செந்தமிழ்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை–625001.

தொலைபேசி : 0452-6575615

RNI Regd. No.: 5508/56 February 2009

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ. எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.